**கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்**
**உடையானாம் வேந்தர்க் கொளி.**

*- குறள்*

***மாண்புகெழுமிய சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே !***

**மே**ன்மைமிக்க இந்த அவையில், 2011-12ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை முன்னிலைப் படுத்த எழுந்துள்ளேன். இது புதுச்சேரி யூனியன் ஆட்சிப் பரப்பிற்கான ஐம்பதாவது வரவு-செலவுத் திட்டம் என்று எண்ணும்போது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. அகில இந்திய N.R. காங்கிரஸ் கட்சி அமோக வெற்றி பெற்று, ஆட்சி அமைத்த பின்னர், தாக்கல் செய்யப்படும் முதல் வரவு-செலவுத் திட்டம் இது. இவ்வாட்சிப் பரப்பு மக்கள் மற்றும் என்றும் நினைவில் நிற்கும் பெருந்தலைவர் காமராஜரின் ஆசியுடன் தயாரிக்கப்பட்டது இந்த வரவு-செலவுத் திட்டம்.

**2.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பின் முன்னேற்றத்திற்கு ஒத்துழைப்பை நல்கிவரும் நடுவண் அரசிற்கு இத்தருணத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக்

கொள்கிறேன். இவ்வாட்சிப்பரப்பில் உள்ள மக்களின் சமூக-பொருளாதார மேம்பாட்டிற்கு, குறிப்பாக ஏழை மக்களைக் கருத்தில்கொண்டு, எனது அரசு அயராது பாடுபடும் என்று இந்த அவையின் உறுப்பினர்களுக்கு நான் உறுதி கூறுகிறேன். பதின்மூன்றாவது சட்டப் பேரவைக்கு மிகவும் அமைதியான முறையில் தேர்தலை நடத்தித் தந்த நமது அரசு நிர்வாகத்திற்கு எனது நன்றியை உரித்தாக்குகிறேன்.

**3.** சென்ற ஆண்டின் திட்ட ஒதுக்கீட்டை விட கூடுதலாக ₹ 250 கோடியை அளித்து நடப்பு நிதி ஆண்டிற்கு ₹ 2,750 கோடியாக திட்ட ஒதுக்கீட்டை திட்டக்குழு அனுமதி அளித்துள்ளது என்று கூற விழைகிறேன். இத்தொகை முழுவதையும் செலவு செய்ய எனது அரசு முயலும். துறைவாரியான இலக்குகளை அடைய தேவைப்படும் நிதி திரட்டப்படும். இவ்வாட்சிப் பரப்பில் படிப்படியாக பல்வேறு உள்கட்டமைப்பு திட்டப்பணிகளை மேற்கொள்ள, சிறப்பு நிதி உதவியாக ₹ 3,645 கோடி மத்திய அரசிடம் கோரப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். திட்டமில்லா

இனச் செலவு தவிர்க்க முடியாதது என்பதால் அதற்கு நிதி ஒதுக்கவேண்டியது அவசியமாக உள்ளது. ஆறாவது மத்திய சம்பளக்குழுவின் பரிந்துரைகளை அமல் படுத்தியதால், அரசு ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் கணிசமாக உயர்ந்துள்ளது. இதனால் திட்டமில்லா இனச் செலவு ஆண்டுதோறும் கூடிக்கொண்டே வருகிறது. மேலும், நாம் வாங்கிய கடனுக்கான வட்டிக்கும், அசலுக்கும் நிதி ஒதுக்கவேண்டியது அவசியமாகிறது.

**4.** இந்த ஆண்டின் வரவு - செலவுத் திட்டம் ₹ 4,830 கோடியாக இருக்கும். இதில் திட்டத்திற்காக ₹ 2,750 கோடியும், திட்டமில்லா இனச் செலவிற்காக ₹ 2,020 கோடியும், மத்திய அரசு ஊக்குவிப்புத் திட்டங்களுக்காக ₹ 60 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. திட்டச் செலவு ₹ 2,750 கோடியை, மாநில சொந்த வருவாய் ₹ 1,320.23 கோடி மூலமும், மாநில கடன் ₹ 950 கோடி மூலமும், அந்நிய உதவித் திட்டங்கள் ₹ 100 கோடி மூலமும் மற்றும் மத்திய உதவி ₹ 379.77 கோடி மூலமும் சரிக்கட்டப்படும்.

5. புதுச்சேரி ஆட்சிப்பரப்பின் பொருளாதாரத்தின் அடிப்படையை உயர்த்த பல்வேறு பரிந்துரைகளுடன் புதுச்சேரி மாநில மேம்பாட்டு அறிக்கையை, திட்டக்குழு தயாரித்துள்ளது. இவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகளின் அடிப்படையில், வல்லுநர் குழு ஒன்றை அமைத்து 12-வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு, பல்வேறு துறைகளுக்கான திட்டங்களைத் தீட்டி, எனது அரசு, தேசிய வளர்ச்சிக் குழுவிடம் அளிக்கும். ஒட்டுமொத்த வளர்ச்சி அடையும் வகையில், சமூக மற்றும் சமுதாயத் துறைகளுக்கு அதிக முக்கியத்துவத்தை எனது அரசு அளித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி 2011-12ஆம் ஆண்டில் 14 விழுக்காடு வளர்ச்சியடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தேசிய அளவில் இது சுமார் ஒன்பது விழுக்காடாக உள்ளது. புதுச்சேரி யூனியன் ஆட்சிப்பரப்பின் வளர்ச்சிக்கு சேவைத்துறை ஒரு காரணியாக இருப்பதால் அதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க வேளாண்சார் மற்றும் தொழிற்சார் துறைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டியது அவசியமாகிறது.

**7.** அதிக வளர்ச்சி விகிதத்தைப் பெற்றிடவும், வேலைவாய்ப்புகளை அதிகரித்திடவும் திறன் மேம்பாட்டில் எனது அரசு கவனம் செலுத்தும். தொடர்பு வசதிகள் மற்றும் சுற்றுப்புறத்தை மேம்படுத்தும் உள்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும். இந்த குறிக்கோள்களை அடைய எனது அரசு கொள்கை மற்றும் திட்டங்களைத் தீட்டும்.

## வேளாண்மை

**8.** மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பல வருடங்களாக தேக்கநிலையில் உள்ள வேளாண் துறையின் வளர்ச்சி விகிதத்தை எனது அரசு உயர்த்தும். நடப்பு நிதி ஆண்டில் வேளாண் துறைக்காக ₹ 95.48 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது, கடந்த ஆண்டு ஒதுக்கீட்டைவிட 79 விழுக்காடு அதிகமாகும். இதில் மத்திய அரசு, தேசிய வேளாண் திட்டத்தின்கீழ் ஒதுக்கியுள்ள ₹ 31.29 கோடியும் அடங்கும். RIDF-யிடமிருந்து நிதியுதவிபெற்று தட்டாஞ்சாவடி, மதகடிப்பட்டு, கன்னியக்கோயில், கரையாம்புத்தூர் மற்றும் காரைக்கால் ஆகிய இடங்களில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் கூடுதலாக

கிடங்குகள் அமைத்து, விற்பனை கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும். விவசாயிகளின் வருமானம் பெருகவும் அவர்களின் விளைபொருட்களின் மதிப்பு கூடும்வகையில் நெல் அடிக்கும் களங்கள், ஊரக கிடங்குகள், குளிரூட்டப்பட்ட கிடங்குகள் மற்றும் பதப்படுத்தும் கூடங்கள் அமைக்கப்படும். ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள், புதுச்சேரி கூட்டுறவு விற்பனை மற்றும் பதப்படுத்தும் சங்கம் மற்றும் பாப்ஸ்கோ மூலம், விவசாயிகளிடமிருந்து மொத்தமாக பொருட்கள் கொள்முதல் செய்யப்படுவதால், அவர்களின் விளைபொருட்களுக்கு ஆதாயமான விலை கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது.

**9.** மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின்கீழ் (Rastriya Krishi Vikas Yojana) கடந்த நிதி ஆண்டு ₹ 4.64 கோடி வழங்கப்பட்டது. நடப்பு நிதி ஆண்டில் இந்த நிதியுதவி ₹ 31.29 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்தை செயல்படுத்த தேவையான “மாநில வேளாண் திட்டம்” (State Agriculture Plan) தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இந்த நிதி ஆண்டில் செயலாக்கப்படும் திட்டங்கள் பற்றி நான் கூற விழைகிறேன்.

**10.** விதை கிராமங்களாக ஏம்பலம், கரிக்கலாம் பாக்கம், சேலியமேடு, பாகூர், சிவராந்தகம் மற்றும் சோரப்பட்டு ஆகிய கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. நெல் விதை உற்பத்தியை மேம்படுத்த தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் அளிக்கும்வகையில், விதைகளை சேமிக்க அந்தந்த கிராமங்களில் கிடங்கு வசதிகள் ஏற்படுத்தப்படும். கரும்பு விவசாயிகளுக்கு அறுவடையின் போது ஏற்படும் ஆள்பற்றாக்குறையின் சிரமங்களைக் கருத்தில்கொண்டு இந்த நிதி ஆண்டில் 3 கரும்பு அறுவடை இயந்திரங்கள் வாங்கப்பட்டு கரும்பு ஆலையின் வாயிலாக அவர்களுக்கு 50 விழுக்காடு மானியத்தில் வாடகைக்கு வழங்கப்படும். நெல் சாகுபடி செய்யும் காரைக்கால் விவசாயிகளின் நலனைக் கருத்தில்கொண்டு, தேவையான நெல் நடும் இயந்திரம் மற்றும் நெல் அறுவடை இயந்திரம் வாங்கப்பட்டு 50 விழுக்காடு மானியத்தில் அவர்களுக்கு வாடகைக்கு வழங்கப்படும். காரைக்கால் பகுதியில் வேலிகாத்தான் மற்றும் பார்த்தீனியம் செடிகளை வேரோடு அப்புறப்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் தானிய வகைகள், பயறு வகைகள்,

எண்ணெய்வித்து சாகுபடி பரப்பளவு வெகுவாக குறைந்துவிட்டது. எனவே, இவ்வகை பயிர்கள் சாகுபடி பரப்பளவை அதிகப்படுத்த அறுவடைக்கு பிந்தைய மானியமாக ஹெக்டேர் ஒன்றுக்கு ₹ 5,000 வழங்கப்படும். புதுச்சேரியில், வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் கீழ் (Agricultural Technology Management Agency) உருவாக்கப்பட்டுள்ள பயிர் சார்ந்த குழுக்களுக்கு 75 விழுக்காடு மானிய விலையில் இயந்திரங்கள் வழங்கப்படும். குறைந்த அளவில் நீரை பயன்படுத்தி அதிக வருவாய் அளிக்கும் வகையில் மாற்றுப் பயிர்களை சாகுபடி செய்ய, மத்திய அரசு, தேசிய தோட்டக்கலைத் திட்டத்தின்கீழ் ₹ 1.50 கோடியை அளித்துள்ளது. இதன் மூலம் காய்கறிகள், பழவகைகள் உற்பத்தியை பெருக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

## கால்நடைப் பராமரிப்பு

**11.** கால்நடைப் பராமரிப்பு மற்றும் கால்நடை நலத்துறைக்கு நடப்பு நிதியாண்டில் திட்ட செலவாக ₹ 30 கோடி ஒதுக்கப்படுகிறது. இது, கடந்த ஆண்டைக்காட்டிலும் 20 விழுக்காடு அதிகமாகும்.

பால் உற்பத்தியில் தன்னிறைவு பெறும் நோக்கத்தில் இந்த நிதி ஆண்டில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள 2,510 பயனாளிகளுக்கு கறவை மாடுகள் வாங்க 75 விழுக்காடு மானியம் வழங்கப்படும். படித்து வேலையில்லா, அரசு வேலைவாய்ப்பு வயது வரம்பைக் கடந்த 36 வயதுக்கு மேற்பட்ட, 50 வயதுக்கு உட்பட்ட 105 அட்டவணை இன பயனாளிகளுக்கு பால் பண்ணை அமைக்க 75 விழுக்காடு மானியம் வழங்கப்படும். மேலும், 90 அட்டவணை இனத்து விதவைப் பெண்களுக்கு பால் உற்பத்தி செய்து வருமானம் பெறும் வகையில் சிறு பால்பண்ணை அமைக்க 100 விழுக்காடு மானியம் வழங்கப்பட உள்ளது. பால் கொள்முதலை அதிகப்படுத்தும் நோக்கில் உற்பத்தியாளர்களுக்கு 75 விழுக்காடு தீவன மானியம் கூட்டுறவு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும். தேசிய வேளாண் வளர்ப்பு திட்டத்தின்கீழ் (Rastriya Krishi Vikas Yojana) பெறப்பட்டுள்ள ₹ 3 கோடி நிதியில், அரசு வேலைவாய்ப்பு வயது வரம்பைக் கடந்த, 50 வயதுக்கு மிகாத, படித்து வேலை வாய்ப்பற்ற 400 பயனாளிகள்

சுய வேலைவாய்ப்பு பெறும் வகையில், சிறு பால்பண்ணை அமைக்க 75 விழுக்காடு மானிய உதவி வழங்கப்படும். இதில் 20 விழுக்காடு அட்டவணை இனத்தவருக்கு ஒதுக்கீடு செய்யப்படும். ஆடு வளர்ப்பின் மூலம் இறைச்சி உற்பத்தியை அதிகப்படுத்தும் வகையில், இந்த நிதி ஆண்டில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள 408 அட்டவணை இன பயனாளிகளுக்கு 5 பெட்டை ஆடுகளும் 1 கிடா ஆடும் வாங்குவதற்கு 75 விழுக்காடு மானியம் வழங்கப்படும். புழக்கடை கோழி வளர்ப்பின் மூலம், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியை பெருக்கும் வகையில் 30,000 (இரு வகை பயன்பாட்டிற்கேற்ற) கிரிராஜா கோழிக்குஞ்சுகள் 50 விழுக்காடு மானியத்தில் வழங்கப்படும். மேலும் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள 3,000 பயனாளிகளுக்கு முட்டை இன கோழிகள் ஐந்து இலவசமாக வழங்கப்படும். மற்றும் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள பயனாளிகளுக்கு 6 வார வயதுடைய 5,000 வான்கோழி குஞ்சுகள் 50 விழுக்காடு மானியத்தில் வழங்கப்படும்.

**மீன்வளம்**

**12.** மீனவர்களின் வாழ்க்கைத் தரம் உயரவும், மீன் உற்பத்தியைப் பெருக்கவும் மீன்வளத்துறை பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தற்போது மீன்பிடிப் படகுகளின் காப்பீட்டுத் தொகையில் 75 விழுக்காடு புதுச்சேரி அரசால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இருப்பினும், மீனவர்கள் தங்கள் படகுகளை காப்பீடு செய்வதில்லை. இயற்கை இடர்பாடுகளால் படகுகள் சேதமடையும்போது அவர்களுக்கு பெரும் இழப்பு ஏற்படுகிறது. இதைப் போக்கிடும் வகையில் நடப்பு ஆண்டிலிருந்து காப்பீட்டுத் தொகை முழுவதையும் அரசே காப்பீட்டு நிறுவனங்களுக்கு நேரடியாக செலுத்தும். இதனால் இயற்கை இடர்பாடுகளால் சேதமடைந்த படகுகளின் உரிமையாளர்கள் பயன்பெறுவர். கடல் மற்றும் நீர்நிலைகளில் மீன்பிடிக்கும் போது, இறக்க நேரிடும் மீனவரின் குடும்பத்திற்கு, மத்திய அரசு காப்பீட்டுத் தொகையாக அளிக்கும் ஒரு இலட்சம் தொகையுடன், மாநில அரசு ₹ 2 இலட்சம் அளிக்கும். காணாமல் போகும் மீனவரின் குடும்பத்திற்கு ₹ 1.50 இலட்சம் ரூபாய் அளிக்கப்படும்.

மீனவர்களுக்கு அளிக்கப்படும் மாத ஓய்வூதியம் ₹ 900லிருந்து ₹ 1,150 ஆக உயர்த்தப்படும். ஆழ்கடல் மீன்பிடிப்பை மேம்படுத்திட இரும்பினாலான விசைப்படகு ஒன்று வாங்க அதிகபட்சமாக ₹ 11 இலட்சம் மானியம் வழங்கப்படுகிறது. இவ்வகை படகுகளின் விலை உயர்வை கருத்தில்கொண்டு இந்த மானியத் தொகையை ₹ 13 இலட்சமாக உயர்த்த உத்தேசித்துள்ளேன். மர விசைப்படகுக்கு தற்போது வழங்கப்படும் அதிகபட்ச மானியத் தொகை ₹ 7.50 இலட்சத்திலிருந்து ₹ 8.50 இலட்சமாக உயர்த்த உத்தேசித்துள்ளேன். மேலும், FRP படகுக்கு வழங்கப்படும் அதிகபட்ச மானியத்தொகை ₹ 75,000லிருந்து ₹ 1 இலட்சமாக உயர்த்தப்படும். மீனவ மாணவர்கள் மேற்கல்வியை தொடரவும், கல்வியின் சிறப்பை அறியவும், 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு தேர்வில் 75 விழுக்காட்டிற்குமேல் மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு தற்போது வழங்கப்படும் ஊக்கத் தொகையான ₹ 4,000 மற்றும் ₹ 6,000த்தை இந்த ஆண்டு முதல் முறையே ₹ 5,000 மற்றும் ₹ 7,000ஆக உயர்த்தி வழங்க எனது அரசு முடிவு செய்துள்ளது. மீன்பிடித் தடைக்காலங்களில்

இரும்பு / மர மற்றும் FRP விசைப்படகுகளை பராமரிப்பதற்காக தற்போது வழங்கப்பட்டுவரும் தொகையான ₹ 20,000 மற்றும் ₹ 10,000 வரும் நிதி ஆண்டு முதல் முறையே ₹ 30,000 மற்றும் ₹ 15,000ஆக உயர்த்தி வழங்கப்படும். உள்நாட்டு மீனவ மக்களின் நலன் கருதி, அவர்கள் தொழில்செய்யும் நீர்நிலைகளான அரியாங்குப்பம் ஆறு, சங்கராபரணி ஆறு, மலட்டாறு மற்றும் காரைக்காலில் உள்ள ஆற்றுப்படுகைகளில் உயர்ரக நன்னீர் மீன்குஞ்சுகளை வளர்த்து, உள்நாட்டு மீன்வளத்தை அதிகரிக்கவும், அவர்கள் அதிக வருமானம் ஈட்டவும் வழிவகை செய்யப்படும். இந்திய அரசின் நிறுவனமான மத்திய கடல்மீன் ஆராய்ச்சி நிறுவனத்துடன் (Central Marine Fisheries Research Institute) இணைந்து கடல் மற்றும் இதர நீர்நிலைகளில் கூண்டு முறையில் மீன்வளர்ப்பை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கான நிதி உதவி தேசிய வேளாண் வளர்ப்பு திட்டத்தின் (Rashtriya Krishi Vikas Yojana) மூலம் பெறப்படும். புதுச்சேரி யூனியன் ஆட்சிப்பரப்பில், மண்ணெண்ணெயினால் இயங்கக்கூடிய மோட்டார் பொருத்தப்பட்ட நாட்டுப்படகு

மீனவர்களின் கோரிக்கையை ஏற்று, அவர்களுக்கு ஒரு லிட்டர் மண்ணெண்ணெய்க்கு ₹ 25 மானியமாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**கூட்டுறவு**

**13.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பின் வளர்ச்சியில் கூட்டுறவு முக்கியத்துவம் அளிக்கிறது. இந்தத் துறைக்காக இந்த ஆண்டு ₹ 50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது, சென்ற ஆண்டைவிட ₹ 12 கோடி அதிகமாகும். புதுச்சேரி பகுதியில் உள்ள புதுச்சேரி கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் புதுச்சேரி கூட்டுறவு நூற்பாலை, காரைக்கால் பகுதியிலுள்ள ஜெயபிரகாஷ் நாராயண் கூட்டுறவு நூற்பாலை ஆகியவற்றை நவீனப்படுத்தி உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும். புதுச்சேரி மாநிலத்தில் செயல்பட்டுவரும் கூட்டுறவு சங்கங்களைப் புனரமைக்கும் விதமாக வல்லுநர்குழு அமைத்து அவைகளை சீரமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் உறுப்பினர்களால் பெறப்பட்ட கடன்களின் மீதான வட்டி மற்றும் அபராத வட்டிகளை தள்ளுபடி

செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. குறைந்த வருவாய் பிரிவினர் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் பெறப்பட்ட தவணை கடந்த அசலை ₹ 1 இலட்சம்வரை தள்ளுபடி செய்ய எனது அரசு உத்தேசித்துள்ளது. பால் பற்றாக்குறையை நீக்கவும், பால் உற்பத்தியை பெருக்கவும் பிரதம கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்க உறுப்பினர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் பாலுக்கு ஆதரவு விலையாக லிட்டர் ஒன்றுக்கு ₹ 1 கூடுதலாக வழங்க எனது அரசு முடிவெடுத்துள்ளது. புதுச்சேரி மாநிலத்தில் நெசவாளர்களின் வாழ்க்கை தரம் உயரவும், அவர்களுக்கு தடையில்லா வேலை வழங்கவும் பாண்டெக்ஸ் மற்றும் பான்பேப் மூலமாக கைத்தறி ஆடைகள் உற்பத்தி செய்யப்பட்டு அரசுத் துறைகளுக்கு விற்கப்படும். நெசவாளர்களுக்கு வழங்கப்படும் குறைந்தபட்ச மற்றும் அதிக பட்ச ஓய்வூதியம் முறையே ₹ 1,000 மற்றும் ₹ 1,250ஆக உயர்த்தி வழங்கப்படும் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஏழை மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள பிரிவினரின் வாழ்க்கைத் தரம் உயர, "புதுச்சேரி பல்நோக்கு சேவை வழங்கும் கூட்டுறவு சங்கம்"

என்னும் ஒரு புதிய சங்கத்தை துவங்க எனது அரசு உத்தேசித்துள்ளது. நாள் ஒன்றுக்கு 1,750 டன் அரைவை திறன் கொண்ட புதுச்சேரி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் அரைவைத் திறனை 3,000 டன்னாக உயர்த்திடும் வகையில், தேசிய கூட்டுறவு அபிவிருத்தி கழகத்திடமிருந்து கடன் பெற்று நவீனப்படுத்தப்படும். நடப்பு ஆண்டில் விவசாயிகளுக்கு வட்டியில்லா பயிர்க் கடன், துவக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் வழங்கப்படும். இதனால் சுமார் 5,000 பயனாளிகள் பயனடைவார்கள். கூட்டுறவு இணையத்தின் மூலம் தொழிற்பயிற்சி நிறுவனம் ஒன்று அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**மின்விசை**

**14.** புதுச்சேரியின் தற்போதைய மின்தேவை சுமார் 420 மெகாவாட் ஆகும். இதுவே 12-வது ஐந்தாண்டுத் திட்டமுடிவில் 548 மெகாவாட் ஆக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. உயர்ந்து வரும் இந்த மின்தேவையை கருத்தில்கொண்டு, ஏனாம் பகுதியில் கிடைக்க உள்ள இயற்கை எரிவாயுவைக் கொண்டு 350 மெகாவாட் மின் உற்பத்தி நிலையம் ஒன்றினை

புதுச்சேரி மின்திறல் குழுமம் (PPCL) மூலமாக அமைக்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், காரைக்காலில் உள்ள துறைமுகத்தை பயன்படுத்தி போலகம் பகுதியில் அனல் மின் நிலையம் ஒன்று அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இந்த அரசால் ஆராய்ந்து செயல்படுத்தப்படும். இலாசுப்பேட்டை பகுதியில் வளர்ந்து வரும் மின் தேவை மற்றும் அடிக்கடி ஏற்படும் மின்தடங்கலை நிவர்த்தி செய்யும் பொருட்டு அப்பகுதியில் 110 / 22 கிலோவோல்ட் துணை மின் நிலையம் ஒன்று அமைக்கப்பட உள்ளது. மின் நுகர்வோர்களுக்கு விரைவாக மின் இணைப்பை கொடுக்கும் பொருட்டு குரும்பாபேட் துணை மின் நிலையத்தில் மேலும் புதிதாக ஒரு 25 MVA மின் மாற்றி நிறுவப்படும். மின் பகிர்மானத்தில் ஏற்படும் மின் இழப்பின் அளவை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும். பொதுமக்களின் வசதிக்காக மின் கட்டணத்தை தபால் நிலையம் மற்றும் வங்கிகளின் மூலமாக செலுத்த எனது அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. மின்தடங்கலால் வரும் புகார்களை நிவர்த்தி செய்திட, 24 மணி நேரமும் இயங்கும்

கணினிமயமாக்கப்பட்ட மையம் ஒன்று அமைக்கப்படும். மின் பட்டியல் பற்றிய புகார்கள் மற்றும் தவறுகளை குறைத்திடும் வகையில், மின் பட்டியலை கணக்கிட்டு வசூல் செய்ய ஒரு புதிய மென்பொருள் அறிமுகப் படுத்தப்படும். 2003-ஆம் ஆண்டு மின்சார விதிகளின்படி அமைக்கப்பட்ட நுகர்வோர் குறைதீர்க்கும் மையம், புதுச்சேரி ஆட்சிப்பரப்பின் நான்கு பகுதிகளுக்கும் சென்று குறைகளைக் கேட்டு அவைகளை களைய ஆவன செய்யும்.

## தகவல் தொழில்நுட்பம்

**15.** அரசுத் துறைகளில் உள்ள சேவைகளை பொதுமக்கள் கணினிமூலம் பெற்றிடும் வகையில் கணினி படிவங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இப்படிவங்கள் மாநில மையத்துடன் ஒருங்கிணைத்து, பின்னர் மாநில சேவை வழங்கல் மையத்துடன் இணைக்கப்படும். முதற்கட்டமாக இத்திட்டத்தின்மூலம், 15 துறைகளில் உள்ள 37 சேவைகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தைச் செயல்படுத்தி நான்கு ஆண்டுகள் பராமரிக்க ஆகும் செலவு ₹ 9.55 கோடியாகும். நேரடியாகவும், மறைமுகமாகவும்

வேலைவாய்ப்புகளை உருவாக்கிட, பள்ளிக்கல்வித் துறைக்குச் சொந்தமான பிள்ளைச்சாவடியில் உள்ள 25 ஏக்கர் நிலத்தில், பிப்டிக் மூலம் சிறப்பு பொருளாதார மண்டல தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்று அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## உள்ளாட்சி

**16.** நகர மற்றும் கிராமங்களில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை அளிப்பதில் உள்ளாட்சித்துறை முக்கியப் பங்கு வகிக்கிறது. நடப்பு நிதி ஆண்டில் இத்துறைக்காக திட்டத்தில் ₹ 144 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. நகராட்சி மற்றும் கொம்யூன் பஞ்சாயத்துப் பகுதிகளில் உள்கட்டமைப்பு மற்றும் பொது சேவைகளை மேம்படுத்த எனது அரசு நிதி உதவி அளிக்கும். புதுச்சேரி நகரப் பகுதியில் 21 சமுதாயக்கூடங்களும், ஊரகப் பகுதியில் 15 சமுதாயக்கூடங்களும் கட்டப்படும். காரைக்கால் ஊரகப் பகுதியில் 16 சமுதாயக்கூடங்கள் கட்டப்படும். புதுச்சேரி நகரப் பகுதியில் 22 அங்கன்வாடி கட்டிடங்களும், ஊரகப் பகுதியில் 11 அங்கன்வாடி கட்டிடங்களும் கட்டப்படும். காரைக்கால் ஊரகப் பகுதியில் 18 அங்கன்வாடி

கட்டிடங்களும் கட்டப்படும். நடப்பு ஆண்டில் உழவர்கரை நகராட்சிக்குள் பெரிய அங்காடி ஒன்றும், பொது அங்காடி ஒன்றும் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி நகரசபை பகுதியில் 34 கழிப்பறை தொகுப்புகளும், ஊரகப் பகுதியில் 20 கழிப்பறை தொகுப்புகளும் கட்டப்படும். காரைக்கால் ஊரகப் பகுதியில் 12 கழிப்பறை தொகுப்புகளும் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**17.** வில்லியனூரில், தற்போது பழுதடைந்த நிலையிலுள்ள அங்காடி கட்டிடத்தை இடித்துவிட்டு, புதிய கட்டிடம் இந்த நிதியாண்டில் கட்டப்படும். கரியமாணிக்கத்திலுள்ள நெட்டப்பாக்கம் கொம்யூன் பஞ்சாயத்திற்கு சொந்தமான வெங்கடசுப்பா ரெட்டியார் திருமண மண்டபம் இடிக்கப்பட்டு, இந்த நிதியாண்டில் புதிய கட்டிடம் கட்டப்படும். காரைக்காலில், தற்போது இடிந்த நிலையிலுள்ள நேரு அங்காடி முழுவதையும் இடித்துவிட்டு, தனியார் பங்களிப்போடு, இந்த நிதியாண்டில் புதிய கட்டிடம் கட்டப்படும். நபார்டு வங்கியிடமிருந்து ஊரக சாலைகளை மேம்படுத்த ₹ 30 கோடி கடன்பெற்று சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ₹ 1 கோடியிலிருந்து ₹ 2 கோடியாக உயர்த்தப்படும்.

## நகர மற்றும் கிராம அமைப்பு

**18.** நகர மற்றும் கிராம அமைப்புத் துறை, புதுச்சேரி யூனியன் ஆட்சிப்பரப்பின் பல்வேறு பகுதிகளின் மேம்பாட்டிற்காக செயல்படுகிறது. குருசுகுப்பத்தில் உள்ள பாழடைந்த துப்புரவு தொழிலாளர்களின் வசிப்பிடம் இடிக்கப்பட்டு படிப்படியாக புதியதாக அடுக்குமாடி கட்டிடம் கட்டி பழைய பயனாளிகளுக்கு அளிக்கப்படும். புதியதாக அறிமுகப்படுத்தியுள்ள இராஜிவ் ஆவாஸ் யோஜனா என்ற மத்திய அரசின் ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ் குடிசையில்லா புதுச்சேரிக்கான ஒரு திட்டம் தயாரிக்கப்படும். நகரப் பகுதிகளில் உள்ள குடிசைப் பகுதிகள் மேம்படுத்தப்படும். மாஹே மற்றும் ஏனாம் பகுதிகள் குடிசையில்லா பகுதிகளாக இந்த நிதி ஆண்டில் அறிவிக்கப்படும். புதுச்சேரி கட்டிட விதிகள் மற்றும் மண்டல ஒழுங்குமுறைகளில் விரிவான திருத்தங்களை கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரியை “குடிசையற்ற” மாநிலமாக மாற்ற வேண்டும் என்று “பெருந்தலைவர் காமராஜ் நூற்றாண்டு வீடு கட்டும் திட்டத்தை” புதுச்சேரி அரசு 2003-04ஆம் நிதி ஆண்டிலேயே அறிமுகம் செய்தது. 2003-04 நிதி ஆண்டு முதல் 2009-10ஆம்

நிதி ஆண்டு வரை இத்திட்டத்தின்கீழ் 32,500 பயனாளிகள் தங்கள் குடிசை வீடுகளை கான்கிரீட் தளம்போட்ட கல்வீடுகளாக கட்டுவதற்கு நிதி உதவியாக ₹ 197.50 கோடி வழங்கப்பட்டுள்ளது. 2009-10ஆம் நிதி ஆண்டில் மீதமுள்ள 22,500 பயனாளிகளுக்கும் நிதி உதவி செய்ய முடிவெடுக்கப்பட்டு, 2009 ஆம் ஆண்டு முதல் 2011 வரை முதல் தவணை நிதி உதவியாக ₹ 60 கோடி 15,000 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. கட்டிடப் பொருட்களின் விலை ஏற்றத்தைக் கருத்தில்கொண்டு, இத்திட்டத்தின்கீழ் தற்போது வழங்கப்பட்டு வரும் நிதி உதவித் தொகையான ₹ 1 இலட்சத்தை இந்த நிதி ஆண்டில் ₹ 2 இலட்சமாக உயர்த்தி வழங்கிட எனது அரசு உத்தேசித்துள்ளது.

**19.** கைத்திறன் உள்ள 60 நபர்களுக்கும், திறனற்ற 75 நபர்களுக்கும் குறைவான செலவில் வீடு கட்டும் தொழில்நுட்பத்தில் பயிற்சி அளிக்கப்படும். வில்லியனூர் கட்டிட மையம் உள்கட்டமைப்பு வசதிகளுடன் புனரமைக்கப்படும். காரைக்கால், பூவத்தில் உள்ள கட்டிட மையத்தில், பயிற்சி அரங்கு ஒன்று கட்டப்படும்.

**ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் திட்டம்** (JNNURM)

**20.** மத்திய அரசின் நிதி உதவியுடன் 2005ஆம் ஆண்டில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் திட்டம் (JNNURM) தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், புதுச்சேரி அரசு ₹ 461 கோடி மதிப்பீட்டில் 8 திட்டங்களுக்கு ஒப்புதல் பெற்றுள்ளது. புதுச்சேரி நகர பாதாள கழிவுநீர் திட்டத்தின் கீழ், முதலியார்பேட்டை, இலாசுப்பேட்டை, ரெட்டியார்பாளையம், மூலகுளம் ஆகிய பகுதிகளில் 36.72 கிலோமீட்டர் குழாய் அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது. இந்த நிதி ஆண்டிற்குள் 100 கிலோமீட்டர் நீளத்திற்கு குழாய் அமைத்து இப்பகுதிகளில் பணிகளை நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், இலாசுப்பேட்டை மற்றும் துப்புராயப்பேட்டையில் கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலைகள் அமைக்க புதுச்சேரி மாசு கட்டுப்பாட்டுக் குழுவின் அனுமதி பெறப்பட்டு, இலாசுப்பேட்டை கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலையின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த நிதி ஆண்டிற்குள் துப்புராயப்பேட்டை

கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலையின் கட்டுமானப் பணிகள் துவக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ், புதுச்சேரி மற்றும் உழவர்கரை நகராட்சிகளிலும், வில்லியனூர் மற்றும் அரியாங்குப்பம் பஞ்சாயத்துக்களுக்கு உட்பட்ட நகர்புறப் பகுதிகளில் உள்ள அனைத்து 102 வார்டுகளிலும் திடக் கழிவுகளை அகற்றும் பணி நடைபெற்று வருகிறது. ஏனாம் நீர் விநியோக திட்டத்தின்கீழ், 22 கிலோமீட்டர் நீளத்திற்கு குடிநீர்க் குழாய் அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது. இந்த நிதி ஆண்டிற்குள் மீதமுள்ள 44 கிலோமீட்டர் நீளத்திற்கு குடிநீர்க் குழாய் அமைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்படும். அட்டவணை இனத்தவருக்காக அபிஷேகப்பாக்கம் மற்றும் திம்மநாயக்கன்பாளையம் ஆகிய இடங்களில் 474 வீடுகள் கட்டும் பணி இந்த நிதி ஆண்டில் தொடங்கப்படும். காரைக்கால் கோவில்பத்தில் அனுமதி பெறப்பட்ட 432 தொகுப்பு வீடுகளில் 72 வீடுகளுக்கான கட்டுமானப் பணிகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன. இந்த நிதி ஆண்டில் மேலும் 216 தொகுப்பு வீடுகளுக்கான பணிகள்

தொடங்கப்படும். அரியாங்குப்பம் மற்றும் முருங்கப்பாக்கம் ஆகிய இடங்களில் ₹ 19.61 கோடி திட்ட மதிப்பீட்டில் 300 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வறுமை ஒழிப்பு அமைச்சகத்திடமிருந்து அனுமதி பெற்று பின்னர் தொடங்கப்படும்.

## தொழில்கள்

**21.** இவ்வாட்சிப்பரப்பில் அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கி, நான்கு பகுதிகளிலும் நிலையான சமச்சீராக தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்டு, புதிய தொழிற்கொள்கை-2011 திட்டம் விரைவில் அறிவிக்கப்படும். தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் உரிமங்களை எளிதில் கிடைத்திட அமைக்கப்பட்ட ஒற்றைச்சாளர முறை திறம்பட செயல்படும் வகையில், உரிமங்கள் அளிக்கும் முறை செம்மைப் படுத்தப்படும். கணினி மூலம் விண்ணப்பம் அளித்தல் மற்றும் அளிக்கப்பட்ட விண்ணப்பம் எங்குள்ளது என்பதை அறியும் வகையில் இத்துறை

கணினி மயமாக்கப்படும். தொழில் மேம்பாட்டிற்காக, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில், சிறப்பு முதலீட்டுப் பகுதிகள் அமைக்கப்படும். அந்தந்தப் பகுதிகளில் முதலீட்டாளர்கள் ஒரே இடத்தில் தொடர்பு கொள்ள உள்ளூர் மேம்பாட்டு அதிகார அமைப்பு அமைக்கப்படும். இந்த அதிகார மையத்திற்கு, சம்பந்தப்பட்ட துறைகளின் செயல்பாட்டு அதிகாரம் அளிக்கப்படும். புதுச்சேரிப் பகுதியில், 50 ஏக்கர் பரப்பளவில் ஒரு புதிய தொழிற்பேட்டை அமைக்கப்படும்.

**22.** தொழில் மற்றும் சேவைத் துறைகளில், வேலைவாய்ப்பைப் பெறக்கூடிய வகையில் வரும் ஐந்து ஆண்டுகளில் 20,000 நபர்களுக்கு பயிற்சி அளிக்க, பிப்டிக் மூலம் திறன் மேம்பாட்டு பள்ளிகள் அமைக்கப்படும். ஒப்பிட்டுப் பார்க்கையில் தொழிற்துறையில் பின்தங்கியுள்ள காரைக்கால் பகுதிக்கு, கூடுதல் சலுகைகள் அளிக்கப்படும். தொழிற்சாலைகளை ஊக்குவிக்கும் வகையில், போலகத்தில், பல்பொருள் சிறப்புப் பொருளாதார மையம் அமைக்கப்படும். எந்த தொழிலில் முதலீடு செய்யலாம் என்ற

விவரங்கள் அளிக்கப்படும். தொழில் முனைவோர்களை ஈர்க்கும் வகையில் தற்போது அளிக்கப்படும் நிதி உதவிகள் மற்றும் சலுகைகள் மாற்றி அமைக்கப்படும். புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் தொழில் துவங்குவதற்கு தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் வகையில் சலுகைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். அதன் ஒரு பகுதியாக ஆண்டுக்கு ₹ 75,000 அளவிற்கு தற்போது வழங்கப்பட்டு வரும் கடனுக்குரிய வட்டிமீதான மானியம் ₹ 5 இலட்சமாக உயர்த்தப்பட்டு 5 ஆண்டுகளுக்கு வழங்கப்படும். அட்டவணை மற்றும் பழங்குடி இனமக்கள் தொழில் தொடங்க ஊக்குவிக்கும் பொருட்டு தற்போது வழங்கப்பட்டு வரும் முதலீட்டு மானியம் ₹ 25 இலட்சத்திலிருந்து ₹ 50 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும். அட்டவணை இனத்தோரும், பெண்களும் தொழில் தொடங்க ஏதுவாக புதியதாக அமைக்கப்படும் தொழிற்பேட்டைகளில் 10 விழுக்காடு இடம் இப்பிரிவினருக்கு என ஒதுக்கீடு செய்யப்படும். தொழில் வளர்ச்சியில் காரைக்கால் மாவட்டம் பின்தங்கியுள்ளதை கருத்தில்கொண்டு, தொழில் முனைவோரை காரைக்கால் மாவட்டத்தில்

தொழில் தொடங்க ஊக்குவிக்கும் வகையில் முன்னுரிமை தொழிற்சாலைகள் தொடங்க முதலீட்டு மானியமாக ₹ 40 இலட்சம்வரை வழங்கப்படும். நலிவடைந்திருக்கும் ஆங்கிலோ பிரெஞ்ச் நெசவாலை, சுதேசி மற்றும் பாரதி பஞ்சாலைகளை புனரமைத்து சீரிய முறையில் செயல்படுத்துவது குறித்து ஆராய்வதற்கான நிபுணர் குழு ஒன்று அமைக்கப்படும். அரசுத் துறைகளின் மூலம் வழங்கப்படும் புடவை உள்ளிட்ட ஆடை ரகங்கள் தயாரிப்பதற்கான பணியினை ஆங்கிலோ பிரெஞ்ச் நெசவாலைக்கு வழங்கி அந்த ஆலை தொடர்ந்து செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும். பெரிய அளவிலான தொழில் திட்டங்களுக்காக அளிக்கப்படும் நிதி உதவிகள் மற்றும் சலுகைகள் பற்றி முடிவு செய்ய எனது தலைமையில் குழு ஒன்று அமைக்கப்படும்.

## தொழிலாளர் நலன்

**23.** கட்டிட நல வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்ய விண்ணப்பித்திருந்த அனைவரின் படிவங்கள் பரிசீலிக்கப்பட்டு இந்த ஆண்டே சுமார் பத்தாயிரம்

கட்டிடத் தொழிலாளர்கள் உறுப்பினராக சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இதேபோன்று நலச் சங்கத்தில் உறுப்பினராக பதிவு செய்ய விண்ணப்பித்திருந்த ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு இந்த ஆண்டே அனைவரும் உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். கரிக்கலாம்பாக்கம் கட்டிட நல வாரியத்தின் மூலமாக ஒரு தொழிற்பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்படும். பெரும் கட்டுமானப் பணிகள் நடைபெறும் இடங்களில் பெண் தொழிலாளர்கள் பயனுறும் வகையில் அவர்களின் குழந்தைகளுக்கென தற்காலிகமாக குழந்தைகள் காப்பகம் அமைக்கப்படும். புதுச்சேரி நகர தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் இரவுநேர தங்கும் விடுதிகள் அமைக்கப்படும். இது, பிற பிராந்தியங்களான காரைக்கால், மாஹே மற்றும் ஏனாமிலிருந்து புதுச்சேரி வருகின்ற தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் அமையும். மருத்துவக் கல்லூரிகளில் சேருகின்ற கட்டிட தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு ₹ 50,000மும், பொறியியல் கல்லூரிகளில் சேருகின்ற குழந்தைகளுக்கு ₹ 25,000மும், பிற கல்லூரிகளில் சேருகின்ற

குழந்தைகளுக்கு ₹ 10,000மும் ஊக்கத்தொகையாக வழங்கப்படும். கட்டிட தொழிலாளர்கள் மற்றும் அமைப்புச் சாரா நலச்சங்க தொழிலாளர்களுக்கு மகப்பேறு உதவியாக தற்பொழுது வழங்கப்படுகின்ற ₹ 1,500ஐ ₹ 2,000ஆக உயர்த்தி வழங்கப்படும். கட்டிட தொழிலாளர்கள் இறக்க நேரிட்டால், அவர்கள் குடும்பத்திற்கு ஈமச்சடங்கிற்காக வழங்கப்படுகின்ற நிதியுதவி ₹ 2,000லிருந்து ₹ 5,000ஆக உயர்த்தி வழங்கப்படும்.

**கல்வி**

**24.** நாட்டின் முன்னேற்றத்திற்கு கல்வி முக்கிய பங்கு வகிக்கிறது. இதை கருத்தில்கொண்டு, எனது அரசு கல்விக்கு அதிக முக்கியத்துவம் அளிக்க உத்தேசித்துள்ளது. உணவுடன் முட்டை அளிப்பதால் மாணவர்களுக்கு ஊட்டச்சத்து அதிகரிக்கும். தற்போது பள்ளி மாணவர்களுக்கு வாரத்திற்கு இரு முட்டைகள் அளிக்கப்படுகிறது. நடப்புக் கல்வி ஆண்டிலிருந்து அனைத்துப் பள்ளி மாணவர்களுக்கும் வாரத்திற்கு மூன்று முட்டைகள் வழங்கப்படும். தற்போது கல்லூரி மற்றும்

பள்ளி மாணவர்களுக்கு பேருந்து சேவைக்காக ஒரு ரூபாய் வசூலிக்கப்படுகிறது. இந்தக் கல்வி ஆண்டு முதல் இச்சேவை இலவசமாக அளிக்கப்படும். தற்போது அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பிலிருந்து பன்னிரெண்டாம் வகுப்புவரை பயிலும் மாணவர்களுக்கு அளிக்கப்படும் ஊக்கத்தொகை நடப்புக் கல்வி ஆண்டு முதல் ₹ 250லிருந்து ₹ 500ஆக உயர்த்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 75,000 மாணவர்கள் பயன் பெறுவர். அரசுப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை பயிலும் மாணவர்களுக்கு புத்தகப்பை இலவசமாக இந்த ஆண்டு வழங்கப்படும். இதனால் சுமார் 95,000 மாணவ, மாணவியர் பயன் பெறுவர். SSA என்ற திட்டத்தின்கீழ் பள்ளிகளில் சுத்திகரிக்கப்பட்ட தரமான குடிநீர் மாணவர்களுக்கு வழங்கப்படும். RMSA என்ற திட்டத்தின்கீழ் மாணவிகளுக்கான கழிப்பறை வசதிகளை மேம்படுத்த எனது அரசு முடிவு செய்துள்ளது.

**25.** மதிய உணவுத் திட்டத்தின்கீழ், புதுச்சேரி பகுதியில் கலிதீர்த்தாள்குப்பம் மற்றும் குருவிநத்தம், காரைக்கால் பகுதியில் கோட்டுச்சேரி, நெடுங்காடு மற்றும் சேத்தூர் ஆகிய இடங்களில் மத்திய சமையல் கூடங்கள் கட்ட

திட்டமிடப்பட்டுள்ளது. தேசிய திறன் ஆய்வுத் தேர்வில் தேர்ந்தெடுக்கப்படும் முதல் ஐந்து மாணவர்களுக்கு தலா ₹ 10,000 அளிக்கப்படும். மாநில அளவில் தேர்ந்தெடுக்கப்படும் 10 மாணவர்களுக்கு தலா ₹ 5,000 அளிக்கப்படும். பள்ளி இறுதித் தேர்வு மற்றும் மேல்நிலைத் தேர்வில் சம்பந்தப்பட்ட பாடத்தில் 100 விழுக்காடு தேர்ச்சியை அளிக்கும் அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

**26.** பாரதிதாசன், வாணிதாசன், புதுவை சிவம் மற்றும் தமிழ்ஒளி ஆகியோரின் சில கவிதைகள் மட்டுமே புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு நிறுவனம் மொழிபெயர்த்துள்ளது. நடப்பு ஆண்டில் காரைக்கால் அம்மையாரின் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பதிகங்களை மொழிபெயர்க்கவும் திட்டமிட்டுள்ளது. புதுச்சேரியின் வரலாறு, இலக்கியம், கட்டிடக்கலை, மதம், தத்துவம், கலை மற்றும் பண்பாடு பற்றிய ஒருங்கிணைந்த களஞ்சியத் தொகுப்பை நான்கு பகுதிகளாக தயாரிக்க உத்தேசித்துள்ளது.

**27.** சென்டாக் மூலம் இந்த ஆண்டு மருத்துவக் கல்லூரிகளில் சேரும் மாணவர்கள் அனைவருக்கும், வருமான உச்சவரம்பு ஏதுமின்றி, படிப்புதவித்தொகையாக ₹ 1.75 இலட்சம் அளிக்க எனது அரசு உத்தேசித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதேபோல் சென்டாக் மூலம் பொறியியல் கல்லூரிகளில் சேரும் மாணவர்கள் அனைவருக்கும் வருமான உச்சவரம்பு ஏதுமின்றி படிப்புதவித்தொகையாக ₹ 25,000 அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. கதிர்காமத்திலுள்ள இந்திரா காந்தி அரசு கலைக் கல்லூரியில் B.Sc., (கணினி விஞ்ஞானம்), M.Com., மற்றும் B.B.A. பாடப்பிரிவுகளும், பாரதிதாசன் அரசுப் பெண்கள் கல்லூரியில் முனைவர் (மனையியல்) பாடப்பிரிவும் துவங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் காரைக்காலில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் கல்வியியல் கல்லூரியில் M.Ed. பாடப்பிரிவும், பெருந்தலைவர் காமராஜர் தொழில்நுட்பக் கல்லூரியில் புதியதாக கடல்சார் பொறியியல் பாடப்பிரிவும் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. பிப்மேட் மூலம் மாஹேயில்

நடத்தப்படும் இந்திரா காந்தி பல்தொழில்நுட்பக் கல்லூரிக்கு கூடுதல் கட்டிடம் கட்டப்படும். கதிர்காமத்தில் உள்ள இந்திரா காந்தி அரசு கலைக் கல்லூரி, தவளக்குப்பத்தில் உள்ள இராஜிவ் காந்தி கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் வில்லியனூரில் உள்ள கஸ்தூரிபாய் அரசுக் கல்லூரி ஆகியவற்றிற்கு புதிய கட்டிடங்கள் கட்ட நபார்டு (NABARD) வங்கியிடமிருந்து கடன்பெற எனது அரசு உத்தேசித்துள்ளது. உலக அளவில் போட்டியிட ஏதுவாக, கணினி கல்வி ஊக்கப்படுத்தப்படும்.

## சுகாதாரம்

**28.** புதுச்சேரி அரசால் ஆரம்பிக்கப்பட்ட மருத்துவக் கல்லூரி சென்ற கல்வி ஆண்டிலிருந்து செயல்படத் துவங்கியுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். பல்வேறு உள்கட்டமைப்பு பணிகளை மேற்கொள்ள நடப்பு நிதியாண்டில், ₹ 50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டு திட்டத்திற்கான ஒதுக்கீட்டை இறுதிசெய்யும் கலந்தாய்வுக் கூட்டத்தில்,

திட்டக்குழுவின் துணைத் தலைவர் கூறிய ஆலோசனையின்படி, கூடுதலாக மத்திய நிதி உதவியைப் பெற, இக்கல்லூரி பற்றிய ஒரு விரிவான திட்ட அறிக்கையை தயாரித்து திட்டக்குழுவிற்கும், மத்திய சுகாதாரத் துறை அமைச்சகத்திற்கும் அனுப்ப எனது அரசு உத்தேசித்துள்ளது. புதுச்சேரியில் "108" ஆம்புலன்ஸ் வாகன சேவையை துவக்க எனது அரசு உத்தேசித்துள்ளது. வீட்டிலிருந்தோ அல்லது விபத்து நடந்த இடத்திலிருந்தோ அழைத்த 15 நிமிடங்களுக்குள் வந்து சேரும் வகையில் புதுச்சேரிப் பகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட 8 இடங்களில் "108" அவசர சிகிச்சை ஊர்தி நிறுத்தப்படும். இந்த ஊர்திகள் நோயாளிகளை அருகில் உள்ள மருத்துவமனைகளுக்கு இலவசமாக அழைத்துச் செல்லும். பழைய அரசு மகப்பேறு மருத்துவமனையில் சர்க்கரை வியாதிக்கென்று தனியாக ஒரு சிகிச்சைப் பிரிவு தொடங்கப்படும். குருவிநத்தம், பொறையூர், நல்லவாடு ஆகிய இடங்களில் துணை சுகாதார நிலையங்களுக்கான கட்டிடங்கள் கட்டி முடிக்கப்படும். காரைக்கால் அரசு பொது மருத்துவமனையில் மாதிரி பரிசோதனைக் கூடம் ஒன்று

அமைக்கப்படும். புதுச்சேரி இந்திரா காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் பட்டமேற்படிப்பு நிறுவனத்தில் மருத்துவ பரிசோதனைக்காக தனியாக புறசிகிச்சைப் பிரிவும், நுண்கதிரியியல் துறையில், Digital X-Ray பிரிவும் ஆரம்பிக்கப்படும்.

**29.** காரைக்காலில் சிறப்பு சிகிச்சை மருத்துவமனை ஒன்று கட்ட உத்தேசம் உள்ளது. இவ்வாட்சிப் பரப்பில் பேறுகாலத்தில் ஏற்படும் தாய் மற்றும் குழந்தை இறப்பு விகிதத்தைக் குறைத்திட, ஊரகப் பகுதிகளில் ஒருங்கிணைந்த அவசரகால குழந்தைப்பேறு மற்றும் சிசு கண்காணிப்புப் பிரிவுகள் அமைக்க எனது அரசு உத்தேசித்துள்ளது.

**30.** பாகூர், அரியாங்குப்பம், தவளக்குப்பம், காலாப்பட்டு, கரிக்கலாம்பாக்கம், நெடுங்காடு மற்றும் சாலக்கரா ஆகிய 7 இடங்களில் புதிய ஹோமியோபதி சிகிச்சைப் பிரிவுகள் அமைக்கப்படும். புதுச்சேரியில் யுனானி சிகிச்சைப் பிரிவும் மற்றும் புதுச்சேரி, காரைக்கால், மாஹே மற்றும் ஏனாம் பகுதிகளில் யோகா மற்றும் இயற்கை வைத்திய சிகிச்சைப் பிரிவுகளும் அமைக்கப்படும்.

## பொதுப்பணி

**31.** புதுச்சேரியில் உள்கட்டமைப்பு வசதிகளை அமைத்து மேம்படுத்துவதிலும், நல்ல தரமான குடிநீர் வழங்குவதிலும் பொதுப்பணித் துறை முக்கியப் பங்கு வகிக்கின்றது. கடந்த ஆண்டின் செலவினமான ₹ 289 கோடியை ஒப்பிடும்போது, இந்த நிதி ஆண்டில் ₹ 624 கோடி இத்துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளதால் பெரிய அளவிலான முன்னேற்றப் பணிகளை எடுத்துக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. புதுச்சேரி நகரப் பகுதியில் குடிநீர் குழாய்கள் பதித்து 30 ஆண்டுகள் ஆகிவிட்டதால், குடிநீரின் தரம் மற்றும் அழுத்தம் குறைவாக உள்ளது. இந்தக் குறைபாட்டை நீக்க, நகரப் பகுதி முழுவதும் புதிய குடிநீர் குழாய்கள் அமைக்கும் பணி, ₹ 70 கோடி செலவில் ஓரிரு மாதங்களில் துவங்க உள்ளது. மேலும், ஊசுட்டேரி தண்ணீரை சுத்திகரித்து நகரப் பகுதிக்கு வழங்கும் திட்டம் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்படும். புதுச்சேரியின் வடக்கு பகுதிகளில் நிலத்தடி நீர் உப்பு கலந்துள்ளது. எனவே, கடல் நீரைக் குடிநீராக்கும் இயந்திரம் முன்னோடி அடிப்படையில் நிறுவ தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுபோன்ற ஒரு திட்டம்

காரைக்காலிலும் மேற்கொள்ளப்படும். நகரப் பகுதிகளான ஜவஹர் நகர், நடேசன் நகர், இந்திரா காந்தி சதுக்கம் ஆகிய இடங்களில் மழைக் காலங்களில் தேங்கும் வெள்ள நீரை துரிதமாக வெளியேற்ற மேட்டு வாய்க்கால் மற்றும் பள்ள வாய்க்கால் சீரமைக்கப்படும். பல பாலங்கள் கட்டியும், சாலைகள் அமைத்தும், புதுச்சேரியில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த எனது அரசு உத்தேசித்துள்ளது. நடப்பு ஆண்டில் திருமலைராஜனார் ஆற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டும் பணி மேற்கொள்ளப்படும். கடலூர் புறவழிச்சாலை மற்றும் அரும்பார்த்தபுரத்தில் இருப்புப் பாதையின் மேம்பாலம் கட்டும் பணி இந்த ஆண்டு மேற்கொள்ளப்படும். புதுச்சேரி பகுதியில், குமாரமங்கலத்தில், மலட்டாற்றின் குறுக்கே, மதகுடன் கூடிய பாலம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மற்றும் கைக்கிளப்பட்டில் ஒரு பாலமும், திருக்காஞ்சியில் ஒரு பாலமும் புதிதாக கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. விழுப்புரம் சாலை அரும்பார்த்தபுரம் தக்ககுட்டையிலிருந்து அரியாங்குப்பம் டோல்கேட்வரை பாப்பாஞ்சாவடி வழியாக புறவழிச் சாலை ஒன்று அமைக்க ஆயத்தப் பணிகள்

மேற்கொள்ளபட்டுள்ளன. காரைக்காலில் உணவுக்கழகச் சாலையை நீட்டி திருநள்ளாறுக்கு அகலமான சாலையை அமைக்க, ஆய்வுப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தப்படும் பணி விரைவில் மேற்கொள்ளப்படும். திருநள்ளாற்றிலிருந்து அம்பகரத்தூர் செல்லும் சாலைப்பணி மேற்கொள்ளப்படும். நடப்பு ஆண்டில், சாரம் காமராஜர் சாலை–லெனின் வீதி சந்திப்பில் உள்ள பாலம் அகலப்படுத்தப்படும்.

**32.** உப்பனாற்றின்மீது மேம்பாலம் (ROB) கட்டும் பணி மீண்டும் துவங்கப்படும். உப்பனாற்றின் குறுக்கே உப்பளத்தில் புதிய பாலம் கட்டும் பணி மேற்கொள்ளப்படும். நடப்பு ஆண்டில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே மணமேட்டில் பாலம் ஒன்று கட்டப்படும். சட்டப் பேரவைக்கான புதிய கட்டிடம் கட்டும் பணி தொடங்கப்படும். புதுச்சேரியில் காமராஜர் மணிமண்டபம் கட்டுமானப் பணியும் கருத்தரங்க மையம் கட்டும் பணியும் துவங்கப்படும். புதுச்சேரி காலாப்பட்டில் சிறைச்சாலைக்கான கட்டிடத்தின் இரண்டாம் கட்ட பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. புதுச்சேரியில் நீதிமன்றக் கட்டிட

வளாகத்தின் இரண்டாம் கட்டப் பணி மற்றும் புதிய நீதிமன்ற வளாகத்தில் சமரசத் தீர்வு மையம் மற்றும் இலவச சட்ட உதவி மையம் உள்ளடக்கிய பொது வசதிகள் கொண்ட கட்டிட வளாகம் கட்டும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது. நீதிபதிகளுக்கு புதுச்சேரி இலாசுப்பேட்டையில் குடியிருப்புகள் கட்டித்தரப்படும். வெவ்வேறு ஆறுகளில் படுகை அணை, செறிவூட்டல் கிணறு கட்டும் பணி மேற்கொள்ளப்படும். பெரியார் நகரில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்டும் பணி எடுத்துக்கொள்ளப்படும். நிலத்தடி நீர் செறிவூட்டலை பெருக்கும்பொருட்டு புதுச்சேரியின் வெவ்வேறு ஆறுகளுக்குக் குறுக்கே படுகை அணைகள் / தடுப்பு அணைகள் கட்டப்பட்டுள்ளன. இதுவரையில் 22 அணைகள் கட்டப்பட்டுள்ளன. சிவராந்தகம், கொம்மாந்தன்மேடு மற்றும் ஆராய்ச்சிக் குப்பத்தில் மூன்று அணைகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. சங்கராபரணியாற்றில் மூன்று, குடுவையாற்றில் ஒன்று, மலட்டாற்றில் மூன்று, முள்ளோடை கால்வாயில் மூன்று என ஆகமொத்தம் பத்து படுகை அணைகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. காரைக்கால் பகுதியில்

திருமலைராஜனாற்றிலும், அரசலாற்றிலும் இரண்டு அணைகள் கட்டப்பட்டுள்ளன. காரைக்கால் பகுதியில் நபார்டு வங்கிக் கடன் உதவியுடன் 16 ஊரக சாலைகள் மேம்படுத்தப்படும்.

**33.** காரைக்கால் நகரப் பகுதியில் குடிநீர்க் குழாய்கள் அமைத்து 30 ஆண்டுகள் ஆகிவிட்டதால் அவைகளை புதிதாக மாற்றி அமைத்து குடிநீர் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும். புதுத்துறை அருகில் ஆற்று நீரை சுத்தப்படுத்தி குடிநீர் வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்படும். காரைக்கால் பகுதியில் சிற்றேரிகள் அமைத்து நீர் தேக்கப்படும். மேலும், ஆறு மற்றும் வாய்க்கால்கள் தூர்வாரப்பட்டு செப்பனிடப்படும்.

## போக்குவரத்து

**34.** புதுவை நகரப்பகுதியில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கும், விபத்துக்களை தவிர்க்க ஆலோசனைகளை வழங்கவும், ஒரு வல்லுநர் குழு அமைக்கப்படும். புதுச்சேரியிலிருந்து பெங்களூரு, மாஹே (பெங்களூரு-மைசூர் வழியாக) மற்றும் கொல்லூர் ஆகிய வழித்தடங்களிலும்

மாஹேயிலிருந்து மைசூர் மற்றும் கொல்லூர் ஆகிய வழித்தடங்களிலும் புதுச்சேரி போக்குவரத்து கழகத்தால் பேருந்துகளை இயக்க புதுச்சேரி அரசு கர்நாடக அரசுடன் ஒப்பந்தம் செய்துள்ளது. காரைக்கால் – திருநள்ளார் – திருக்கடையூர் – சீர்காழி இடையே அகல இரயில்பாதை திட்டத்தை செயல்படுத்த இரயில்வே துறையுடன் கலந்தாலோசனை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**சுற்றுலா**

**35.** சுற்றுலாத்துறை மூலம் மாநிலத்திற்கு அதிக வருவாய் கிடைக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். எனது அரசு சுற்றுலாவிற்கு உயர் முன்னுரிமை அளிக்கிறது. சுற்றுலாத்துறைக்கு திட்ட இனத்தில் நடப்பு நிதியாண்டில் ₹ 90 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. சுண்ணாம்பாறு உப்பங்கழி, ஊசுட்டேரி மற்றும் காரைக்கால் அரசலாறு ஆகிய இடங்களில் படகு வீடுகள் மற்றும் நவீன நீர்விளையாட்டுக் கருவிகளை அறிமுகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. உயிர்பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக உயிர்காப்பு கவசங்கள், மிதவைகள்

போன்ற சாதனங்களை வாங்கவும் உத்தேசிக்கப் பட்டுள்ளது. கடற்கரை முகப்பில் தங்குவதற்கான அதிக கோரிக்கைகள் இருந்துவருவதால், சுண்ணாம்பாற்றில் உள்ள உல்லாச தீவிற்கும், குடில்களுக்கும் மின்சார வசதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. பெரு அளவு-வணிக அமைப்பு விதிகளுக்கிணங்க, கடற்கரை சீகல்ஸ் உணவகம், கடற்கரைச்சாலை லே கபே உணவகம், சுண்ணாம்பாறு சீகல்ஸ் உணவகம் மற்றும் காரைக்கால் சீகல்ஸ் உணவகம் ஆகியவற்றிற்கு உள்கட்டமைப்பு வசதிகளை அதிகரிப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**36.** கிராமப்புறச் சுற்றுலாவை மேம்படுத்தும் நோக்கில், ஆலங்குப்பம் கிராமத்தில் கைவினைக் கண்காட்சியுடன் கூடிய விற்பனை மையம் மற்றும் குடில்களுடன் கூடிய உணவகம் அமைக்கப்படும். கிராமப்புற கைவினைக் கலைஞர்களால் உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, அவர்களுடைய உற்பத்திப் பொருட்கள் காந்தித் திடலில் கட்டப்பட்டுவரும் கைவினைப்பொருட்கள் விற்பனை மையத்திலும் மற்றும் முருங்கப்பாக்கத்தில் கலை மற்றும்

கைவினை கிராமத்திலும் விற்பனை செய்யப்படும். இந்த நிதியாண்டில் பாகூர் மற்றும் கிருமாம்பாக்கம் ஏரிகளை அழகுபடுத்தி அங்கு சுற்றுலா உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதால் கிராமப்புறப் பகுதிகளை நோக்கி சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் வரவழைப்பதற்கு வழிவகுக்கும்.

**37.** புதுச்சேரி உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பக் கல்வி நிலையம் உணவக மேலாண்மைக்கான தேசியக் குழுவுடன் இணைக்கப்பட்டு தரமான கல்வியளிக்கப்படும். இங்கு பயிலும் நம்மாநில மாணவர்களுக்கு கல்விக் கட்டண விலக்கு அளிக்கப்படும். வருங்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள சுற்றுலாத் திட்டங்களை விரைவாகச் செயல்படுத்தும் பொருட்டு திட்ட மேலாண்மைக் கலந்தாயுநர்கள் பணியமர்த்தப்படுவர். சுண்ணாம்பாறு நீர்விளையாட்டுக் கட்டிட வளாகத்தை விரிவுபடுத்தவும், கடல்வாழினக் காட்சியகம் (Oceanarium) மற்றும் கடல்சார் பூங்கா அமைக்கவும் நிலம் கையகப்படுத்தும் பணி தொடங்கப்படும். புதுச்சேரி, காரைக்கால், மாஹே மற்றும் ஏனாமில் அனைத்து

நுழைவு வாயில்களிலும் சுற்றுலா தகவல் மையங்கள் அமைக்கப்படும். சுற்றுலாக்கள் செல்லவும் மற்றும் பயணத்திற்காகவும் புதியதாக குளிரூட்டப்பட்ட நவீன பேருந்துகள் வாங்கப்படும்.

**ஆதிதிராவிடர் நலம்**

**38.** ஆதிதிராவிடர் நலனுக்கென்று தனியாக திட்ட ஒதுக்கீட்டில் ஒதுக்கப்படும் சிறப்புக்கூறு திட்ட நிதியை சரியான முறையில் பயன்படுத்துவதை உறுதிசெய்ய எனது தலைமையில் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளை கொண்ட ஒரு நிலைக்குழு அமைத்து கண்காணிக்கப்படும். இந்த ஆண்டே சிறப்புக்கூறு திட்டத்தில் ₹ 412.85 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தொழிற்கல்வி சார்ந்த உபகரணங்கள் மற்றும் நவீன தொழில்நுட்பங்கள் குறித்து அறிந்துகொள்ளும் வகையில் பொறியியல் மற்றும் M.C.A படிக்கும் அட்டவணை இனத்து மாணவர்களுக்கு மடிக்கணினி (Laptop) இலவசமாக வழங்கப்படும். இந்த நிதியாண்டில் 10,000 அட்டவணை இனத்தைச் சேர்ந்த குடும்பங்களுக்கு சலவை இயந்திரம் (Washing Machine) இலவசமாக வழங்க எனது அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்

**39.** ஏற்கனவே அரசால் அளிக்கப்பட்ட ₹ 6,000, ₹ 10,000 மற்றும் ₹ 20,000 மானிய உதவியுடன் பயனாளிகளால் கட்டப்பட்ட 1,600 வீடுகள் தற்போது சேதமடைந்த நிலையில் உள்ளன. எனவே, எமது அரசு, இப்பயனாளிகளையும், தற்போதுள்ள இராஜிவ் காந்தி வீடு கட்டும் திட்டத்தின்கீழ் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது. சமூகத்தில் மிகவும் பின்தங்கி இருக்கும் அட்டவணை இனத்து மக்களின் நலனுக்காக எனது அரசு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது. அட்டவணை இனத்து வீட்டு வசதி திட்டத்தின்கீழ், புதுச்சேரியில் உள்ள பல்வேறு ஊரகப் பகுதிகளில் 1,689 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க எனது அரசு உத்தேசித்துள்ளது. மேலும் காரைக்கால் பகுதியில் 570 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும். நம் ஆட்சிப்பரப்பு அட்டவணை இனத்து மாணவர்கள் இந்திய அளவில் நடத்தப்படும் தேர்வில் தேர்ச்சிபெறும் வகையில் இந்திய ஆட்சிப்பணி தேர்வுக்கான பயிற்சி பாரத் ரத்னா டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அறிவு மற்றும் விழிப்புணர்வு மையத்தால் அளிக்கப்படுகிறது. நடப்பு ஆண்டில் இந்த மையம் பட்டம் படித்த 50 நபர்கள் மற்றும் பட்டமேற்படிப்பு படித்த 50 நபர்களுக்கு பயிற்சி

அளிக்கும். கிருஷ்ணா நகரில் ₹ 4 கோடி செலவில் அட்டவணை இனத்து மாணவிகளுக்கான விடுதி ஒன்று கட்டப்படும்.

## சமூக நலம்

**40.** மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வு மையத்தில் வாழ்க்கைத் தொழில்கல்வி பயிலும் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் மாத உதவித் தொகை ₹ 800லிருந்து ₹ 1,000ஆக உயர்த்தப்படும். இதுவரை ஒரு மாற்றுத்திறனாளி ஊனம் இல்லாதவரை மணந்துகொண்டால் அவர்களுக்கு ₹ 25,000 திருமண உதவித் தொகை வழங்கப்படுகிறது. இப்பொழுது ஒரு மாற்றுத்திறனாளி மற்றொரு மாற்றுத்திறனாளியை மணந்தால் ₹ 50,000 திருமண உதவித் தொகையாக வழங்க அரசு உத்தேசித்துள்ளது. மாற்றுத்திறனாளிகளின் ஓய்வூதியத்தை அதிகரித்து அளிக்க எனது அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி 40 விழுக்காடு முதல் 65 விழுக்காடுவரை உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு ₹ 1,100ஆகவும் 66 விழுக்காடு முதல் 85 விழுக்காடு வரை உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு ₹ 1,400 ஆகவும்

86 விழுக்காடு முதல் 100 விழுக்காடுவரை உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு ₹ 1,750 ஆகவும் உயர்த்தப்படும். மாற்றுத்திறனாளிகளுக்கான நலத் திட்டங்களை கண்காணித்து அவர்களுக்குரிய சட்டப்படியான உரிமைகளைப் பெற்றுத்தர புதுச்சேரி மாநிலத்திற்கான தனி ஆணையர் நியமிக்கப்படுவார். 2007ஆம் ஆண்டு பெற்றோர் மற்றும் மூத்தகுடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டத்தின்கீழ் பராமரிப்பு தீர்ப்பாயங்களும், மேல்முறையீடு தீர்ப்பாயங்களும் அமைக்கப்படும்.

## மகளிர் மற்றும் சிறார் நலம்

**41.** பெண்களுக்கு அதிகாரமளிக்கும் வகையிலும் சிறார்களின் நலன் மேம்படுத்தவும் போதுமான நிதி ஒதுக்கப்பட்டு பல்வேறு திட்டங்களை எனது அரசு செயல்படுத்துகிறது. எனது அரசு நடப்பு ஆண்டு மே மாதத்திலிருந்து முதியோர் மற்றும் விதவைகளுக்கு அளிக்கப்படும் ஓய்வூதியத்தொகையை ₹ 750லிருந்து ₹ 1,000ஆக உயர்த்தப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இதற்கு கூடுதலாக ₹ 52 கோடி தேவைப்படும். மேலும் அனைத்து சிகப்பு மற்றும் மஞ்சள் குடும்ப

அட்டைதாரர்களுக்கு ஒரு வேட்டி, சேலை, ரவிக்கை மற்றும் துண்டு ஆகியவற்றை எனது அரசு பதவியேற்றபின் வழங்கத் துவங்கியுள்ளது. இதன் மூலம் சுமார் 2,52,104 குடும்ப அட்டைதாரர்கள் பயனடைவார்கள். விதவைகள் மறுமணத்தை ஊக்குவிக்கும் வகையில் இதுவரை வழங்கப்பட்டு வரும் ஊக்கத்தொகை நடப்பாண்டிலிருந்து ₹ 20,000லிருந்து ₹ 50,000ஆக உயர்த்தப்படும்.

## பொதுவினியோகம் மற்றும் நுகர்வோர் விவகாரம்

**42.** எனது அரசு பதவியேற்றபின்பு, சிகப்பு நிற அட்டைதாரர்களுக்கு 25 கிலோ அரிசி, மஞ்சள் நிற அட்டைதாரர்களுக்கு 15 கிலோ அரிசி மற்றும் AAY அட்டைதாரர்களுக்கு 35 கிலோ அரிசி இலவசமாக அளிக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இதன் மூலம் 3.33 இலட்சம் அட்டைதாரர்கள் பயன் அடைகிறார்கள். வருடத்திற்கு ₹ 80.82 கோடி செலவிடப்படுகிறது. நடைமுறையில் உள்ள மஞ்சள் நிற அட்டைகள் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டி மக்களிடமிருந்து அதிக கோரிக்கைகள் வருவதால், கள ஆய்வு செய்யப்பட்டபின் தகுதியானவர்களுக்கு சிகப்பு

நிற அட்டைகளாக மாற்றி அளிக்கப்படும். அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிக்கும்போது சந்தைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட ஒரு நிதியம் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**பொது**

**43.** புதுச்சேரி கருவடிக்குப்பம் வருவாய் கிராமத்தில் நான்கு மாவட்ட நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் மற்றும் இரண்டு சார்பு-நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டும்பணி எடுத்துக்கொள்ளப்படும். திருமலைராயன்பட்டினம், போலகத்தில் வேதிப்பொருள் மற்றும் வாயு தீயணைப்பு வசதிகளுடன் கூடிய ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**44.** காரைக்கால் வளர்ச்சியில் எனது அரசு சிறப்பு கவனம் செலுத்தும் என்று இந்த அவையின் உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். காரைக்காலில் உள்கட்டமைப்புகளை மேம்படுத்தவும், நீர் ஆதாரத்தை உயர்த்தவும் மற்றும் சாலை வசதிகளை

அளித்திடவும் எனது அரசு சிறப்பு கவனம் செலுத்தும். சென்ற ஆண்டு காரைக்கால் பகுதிக்கு திட்ட ஒதுக்கீட்டில் ₹ 234 கோடி செலவு செய்யப்பட்டது. நடப்பு ஆண்டில் இந்த ஒதுக்கீடு ₹ 332 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. முதற்கட்டமாக காரைக்காலில் ஒரு புதிய ஆட்சியர் அலுவலக வளாகம் விரைவில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான 40 ஏக்கர் நிலம் ஏற்கனவே கையகப்படுத்தப்பட்டுள்ளது.

**45.** பதிவு செய்யப்பட்ட பல்வேறு பள்ளிவாசல்களின் உலிமாக்களுக்கு (Ulemas) மாதமொன்றுக்கு ₹ 1,000 உதவித் தொகை அளிக்கும். ‘உலிமாக்களுக்கான ஓய்வூதியத் திட்டம்’ என்ற ஒரு புதிய திட்டம் இந்த நிதியாண்டு முதல் செயல்படுத்தப்படும். புதுச்சேரி சித்தர்கள் வாழும் ஓர் ஆன்மீக பூமி. இங்கு சில புகழ்பெற்ற சித்தர் பீடங்கள் வழிபாட்டுத் தலங்களாக உள்ளன. இச்சித்தர்பீடங்களை பராமரிக்க நிதி உதவி அளிக்க எனது அரசு உத்தேசித்துள்ளது. புதுச்சேரியில் உள்ள

ஸ்ரீ வரதராஜப்பெருமாள் கோயில், ஸ்ரீ வேதபுரீஸ்வரர் கோயில், வில்லியனூர் திருக்காமீஸ்வரர் கோயில், திருக்காஞ்சியிலுள்ள காசிவிஸ்வநாதர் கோயில் மற்றும் கருவடிக்குப்பத்திலுள்ள குரு சித்தானந்த சுவாமிகள் கோயில் ஆகிய தலங்களுக்கு புனருத்தாரணம் செய்ய அரசு நிதியளிக்க உத்தேசித்துள்ளது.

**46.** எனது அரசு, இவ்வாட்சிப்பரப்பில், மின்- ஆளுகை செயற்திட்டத்தின்கீழ் இந்த நிதியாண்டில் மின்-முத்திரையிடும் முறையை அறிமுகப்படுத்தும். இம்முறை எளிதானது, பாதுகாப்பானது, மின்னணுசார்புடையது மற்றும் இணையம் மூலமான முத்திரைத் தீர்வையைச் செலுத்தல் ஆகிய சிறப்பியல்புகளைக் கொண்டிருக்கிறது. இது, எந்நேரமும் முத்திரைத் தீர்வையைச் செலுத்தும் வசதியையும், அரசுக் கணக்கில் பாதுகாப்பான விரைவாக பணம்செலுத்தும் வசதியையும் கொண்டுள்ளது. மின்-முத்திரையிடுதலானது, அரசுக்கும், பொதுமக்களுக்கும் பயனுடையதாகும். மேலும் இது, அரசுக்கு உடனடி நிதி கிடைக்க வழிவகுக்கின்றது. உயர் பாதுகாப்பானது மற்றும் சேதப்படுத்த முடியாதது. அரசுக்கு குறிப்பிடத்தக்க அளவு செலவைக் குறைப்பது,

ஒரு விசையை அழுத்தினால் எந்நேரமும் அனைத்து முக்கிய அறிக்கை மற்றும் தகவல் கிடைக்கப்பெறும் நிலையில் உள்ளது. அதிக விலை வைத்து முத்திரைத்தாள்களை விற்பனை செய்வதை முற்றிலும் தடுக்கும் தன்மை உடையது.

**47.** இந்த வரவு-செலவுத் திட்ட உரையில் நான் கூறியுள்ள அனைத்து நலத்திட்டங்களையும் செம்மையாக செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் உறுதியாகக் கூறுகிறேன். மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே! நான் இந்த வரவு-செலவுத் திட்டத்திற்கு இந்த அவையின் ஒப்புதலைக் கோருகிறேன்.

***வணக்கம் !***